


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், உணவு பாதுகாப்புத் துறையின் கோயம்புத்தூர் மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கே. தமிழ்ச்செல்வன், உலக உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி 7.6.2023 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தால் நடத்தப்பட்ட 2022–2023ஆம் ஆண்டிற்கான ”Eat Right Challenge போட்டியில் கோயம்புத்தூர் மாவட்டம் இந்திய அளவில் முதலிடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் ஆர். லால்வேனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.06.2023) தலைமைச் செயலகத்தில், அரிய வகை முகச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று குணமான சிறுமி டானியாவுக்கு திருவள்ளூர் மாவட்டம், பாக்கம் கிராமத்தில் 1.48 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்திற்கான வீட்டுமனைப் பட்டா மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் அனைவருக்கும் வீடு வசதி திட்டத்தின் கீழ் 2.10 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடு கட்டிக்கொள்ள அனுமதி ஆணையினையும் வழங்கினார். இந்நிகழ்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் சா.மு. நாசர் மற்றும் சிறுமி டானியாவின் பெற்றோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.6.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாநிலம் முழுவதும் நடைபெற்ற 2022–2023ஆம் ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் போட்டியில் வெற்றி பெற்ற 124 மாணவர்களுக்கு பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கிடும் அடையாளமாக 9 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகையாக தலா ரூ.15,000/–க்கான காசோலையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி, வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.6.2023) சென்னையில் நடைபெற்ற முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் வெ. பொன்ராஜ் அவர்களின் மகன் வெ.பொ.பிரவீன்குமார் – கோ.மேரி மோனிகா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு டென்மார்க் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் டென்மார்க் தலைநகரம் கோப்பன்கேகனில் டென்மார்க் சுற்றுச்சூழல் அமைச்சர் மாகனஸ் – யோஹான் ஹய்னிகா மற்றும் தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது (DEPA) தலைவர் பிஃலிப் பெடர்சன் மற்றும் கூடுதல் தலைமை செயலர் நீர்வளத்துறை சந்தீப் சக்சேனா உடனிருந்தனர். சென்னையில் உள்ள அடையாறு கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாயினை நவீன தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி புனரமைப்பதற்கான இரு நாட்டினரின் ஒருங்கிணைந்த பணிக்குழுவை நியமித்துள்ளனர்.


திரு.வி.க. நகர் தொகுதியில் கட்டப்பட்டுள்ள
ஸ்டீபன்சன் சாலை மேம்பாலத்தை திறந்து வைத்து
மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கிட வருகை தரும் ...

கலைஞர் 100 1924 - 2023



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கழகத் தலைவர்
அவர்களே

வருக ! வருக !!

மாண்புமிகு அமைச்சர் பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்

மேயர் பிரியாராஜன், கலாநிதிவீராசாமி எம்.பி

செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதாமகேஷ்குமார்MC,
இசட்.ஆசாத்MC, புனிதவதிஎத்திராசன்MC, டி.லோகேஷ், ந.துலுக்காணம்B.A.,B.L.,
லயன் பி.உதயசங்கர், P.J.துளசிங்கம், எம்.பெரோஸ்கான்,

எம்.சரவணன்B.A.,B.L.,MC, அம்பேத்வளவன்MC, ரமணிலோகேஷ்MC, தமிழ்செல்விசசிகுமார்MC,
பரிமளாசுரேஷ், மா.ருத்ரமூர்த்திB.A.,B.L., M.A.டீக்கா, M.Z.அபோய், M.தமீம்,
பொல்லு டி.சுரேஷ்குமார், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார்B.A.,B.L.,
வி.கே.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், எஸ்.வெங்கடேசன்



அன்புடன்
வழக்கறிஞர் ப.தாயகம்கவி, எம்.எல்.ஏ.,
கழக துணை அமைப்பு செயலாளர்
திரு.வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

நாள் : 01.07.2023 – நேரம் : மாலை 5.00 மணி – இடம் : ஸ்டீபன்சன் சாலை